DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.99/2018**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஜயபாரதி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மலையரசன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 09.03.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் ஆதியாகுடி, தற்போது புளியாலில் வசித்து வருகிறேன். கடந்த 24.05.2018 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என் வீட்டின் முன்பாக நடந்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை மேப் வரைந்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கார்த்திக் வீட்டிற்கு 24.05.2018ம் தேதி நான் எத்தனை முறை போய்வந்தேன் என்றால், 2 முறை போய் வந்தேன். போலீசார் என்னை மதியம் 3.30 மணிபோல் விசாரித்தார்கள். எனக்கும் 1ம் எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல, சமீபகாலமாகதான் 1ம் எதிரியிடம் பேச்சுவார்த்தை இல்லை, சம்பவத்தின்போது நன்றாக பேசிக்கொண்டுதான் இருந்தோம். சம்பவம் நடந்த இடத்தில் ஆயுதங்கள் எதையும் கைப்பற்றி நான் பார்க்கவில்லை. போலீசார் என்னிடம் 1 கையெழுத்துதான் வாங்கினார்கள். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் ஆயுதங்கள் பற்றி எதுவும் குறிப்பிட்டிருந்ததா என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் வேறு எதுவும் கைப்பற்றியதாக சொல்லியிருக்கிறார்களா என்பது எனக்கு தெரியாது என்றால், தெரியாது அதன்பின்பு அதை நான் பார்க்கவில்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் நான் புளியாலில் இல்லை என்றும் ஆதியாகுடியில்தான் இருந்தேன் என்றும் புகார் கொடுத்தவர் எனக்கு உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, அவர் எனக்கு உறவினர் இல்லை. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து போலீசார் என்னை காவல் நிலையம் வரவழைத்து கையெழுத்து போடச் சொன்னர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.